1974 சனவரி 28]

அந்தப் பிரதேசத்தில் மழை குறைந்துகொண்டு வருகிறது. அதனுல் மலைப்பிரதேசங்களில் மண் மூடி தண்ணீர் பெறுமல் போகும் நிலை ஏற் படுகிறது. ஆகவே, அப்பகுதியிலே உள்ள காட்டு மரங்களை வெட்டுவதைத் தடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பொதுவாக எங்கேயுமே வெட்டக்கூடாது என்பது அரசின் கொள்கை. இருந்தாலும் பெரிய தேக்கு மரங்கள் அரசின் ஒவ்வொரு துறைக்கும் தேவைப்படும் நேரத்தில் வெட்டுகிறோம். இத்தனை ஆண்டுகளுக்கு மேலேயிருந்தால் தேக்கு மரங் கள் வெட்டப்பட வேண்டுமென்ற நிலையிருப்பதால் முதிர்ந்த மரங்கள் அரசாங் கத்தால் வெட்டப்படுகிறதே தவிர பொதுவாகத் தடுக்கப்படுகிறது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மலையிலிருந்து கேரளாவிலுள்ள மாவூர் தொழிற்சாலைக்கு பிர்லாவினுல் ஏராளமான மரங்கள் வெட்டி எடுத்துச் செல்லப்படுகிறது. தமிழ் நாட்டிலுள்ள விஸ்கோஸ் போன்ற தொழிற்சாலைகளுக்கு மரங்கள் பற்றுக் குறையாக இருக்கும் நேரத்தில் நம் மாநிலத்திலுள்ள தொழில்கள் பாதிக்கும் அளவில் பிர்லா எடுத்துச் செல்வதைச் தடுக்க இந்த அரசு ஏற்பாடுசெய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, நமது மாநிலத் திலிருந்து கேரளத்திற்கு மரம் வெட்டி செல்லப்படுவது உண்மை அல்ல. நம் மாநிலத்திலுள்ள இதுபோன்ற தொழிற்சாலைகளுக்கு விரைவாக வள ரும் மரங்களை நாம் கொடுக்கிறோம். தொழிற்சாலைகள் அதிகமாகப் பெருக வேண்டுமென்பதற்காக 65,000 ஹெக்டேரில் தனியாக "ஃபாரஸ்ட் கார்ப்ப ரேஷன்" வைக்க வேண்டுமென்ற பரிசீலனை இருக்கிறது. அதைப் பரி சீலனை செய்து இன்னும் முடிவெடுக்கவில்லை, கூடிய சீக்கிரம் முடிவெடுக் கப்படும்.

பனைவெல்ல சம்மேளனங்கள்

* 209 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அற நிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் தற்போது எத்தனை பனைவெல்ல உற்பத்தி யாளர் சம்மேளனங்கள் உள்ளன ?

(இ) இவைகளைக் கலைத்துவிடும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) தமிழ்நாட்டில் தற்போது 8 மாவட்ட பனைவெல்ல சம்மேளனங்களும் ஒரு மாநில பனைவெல்ல சம்மேளனமும் உள்ளன.

(இ) ஆம். எல்லா மாவட்ட சம்மேளனங்களையும் கலைத்துவிட்டு அவை களின் நடவடிக்கைகளை மாநில சம்மேளனத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1974 சனவரி 28

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தப் பனை வெல்ல உற்பத்தியாளர்கள் சம்மேளனத்திற்கு அரசாங்கம் எந்தெந்த வகைகளில் உதவுகிறது. இதை உடனடியாகக் கலைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தின் மூலம் அவர்களுக்கு நிதி உதவி செய்து வருகிறோம். அவர்கள் ஆங்காங்கேயுள்ள கிராமங்களிலுள்ள சங்கங்களுக்கு, அதிலேயிருக்கும் தொழிலாளர்களுக்குக் கடன் உதவி செய்து, அவைகளை வசூல் செய்து திருப்பிச் செலுத்துகிறார்கள். ஆனால் பெரும்பான்மையான சங்கங்கள், குறிப்பாக எல்லா மாவட்ட சம்மேளனங்களுமே ஏராளமான நஷ்டத்தில் நடப்பதால் அவைகளைக் கலைத்துவிட்டு, மாவட்ட அளவில் இருப்பதை மாற்றி, ஒவ்வொரு வட்டார அளவிலே, "ரீஜினல் அட்வைசரி கமிட்டி" என்று அமைத்து, அதேபோல் மாநில அளவில் "ஸ்டேட் அட்வைசரி கமிட்டி" என்று அமைத்து, அதிகாரிகள், அதிகாரப் பற்றற்றவர்கள், அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்கள் போன்ற இவர்களை வைத்து அந்தத் தொழிலின் மூலம் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு உதவி செய்யும் வகையில் மாற்றி அமைக்க வேண்டுமென்று அரசாங்கம் முடிவெடுத்து, தற்பொழுது அதற்கான வேலைகளில் ஈடுபட்டிருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, வாரியத்தின் முதன்மை அதிகாரி அவர்கள் 1973-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15-ம் தேதியில் ஒரு ஆணையிட்டு 1974-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 8-ம் தேதியிலே கன்னியாகுமரியிலே இருக்கும் அந்த "ஃபெடரேஷனை" "லிக்குடைட்" செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதிலே பயிற்சி பெற்றவர்கள், எஸ்.எஸ்.எல்.சி., பி.யூ.சி. போன்ற வகுப்பிலே தேறியவர்கள் பலரும் பல்லாண்டுகளாகப் பணி புரிந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்று வேலை அளிக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்த சம்மேளனங்கள் ஏராளமான நஷ்டத்தில் நடப்பதற்குக் காரணம், ஒவ்வொரு மாவட்டத்திலேயும் அதிலே ஏராளமாகப் பணிபுரியும் ஊழியர்கள், அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் இவைகளால் தான். கொடுக்கக்கூடிய கடன் அளவைவிட இந்தச் சம்பளங்கள் அதிகமாகப் போய் லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. முன்னால் இந்தத் துறையின், கதர் வாரியத்தின் தலைவராக இருந்த உணவுத் துறை அமைச்சரவர்களால் ஒரு குழு நிறுவப்பட்டது. அந்தக் குழுவில் அந்தத் தொழில் சம்பந்தமான நிறுவனங்களும் இருந்து அவர்கள் செய்துள்ள பரிந்துரைகளை ஏற்றுத்தான் செய்கிறோம். வேலையிழப்பவர்களுக்கு மாற்று வேலை அளிக்க வாய்ப்பு வரும்பொழுது தேவையான நடவடிக்கை எடுக்கலாம்.

1974 சனவரி 28]

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள "பாம்கர் பெடரேஷன்" லிக்குடேட் செய்யப்பட்டதால் அதிலே வேலை செய்துகொண்டிருந்தவர்கள் இப்பொழுது வேலையிழந்து இருக்கிறார்கள். அவர்கள் அரசுக்கு ரெப்ரசெண்டேஷன் கொடுத்திருக்கிறார்கள். அந்த ரெப்ரசண்டேஷன் அடிப்படையில் அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன ? அவர்களுக்கு வேலை கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அவர்கள் அரசாங்கத்திடம் முறையீடு செய்திருக்கிறார்களா, இல்லையா என்ற தகவல் இப்பொழுது என்னிடத்திலே இல்லை. ஆனால் வேலையிழந்தவர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு வரும்பொழுது அவர்களுக்கு முதல் சலுகை அளித்து வேலைகளைக் கொடுக்கலாம்.

திரு. எஸ். நல்லசாமி : தலைவரவர்களே, இந்த மாவட்ட சம்மேளனங்கள் நஷ்டத்தில் வேலை செய்கிறது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். அது மாதிரி ஒவ்வொரு வருஷமும் எவ்வளவு நஷ்டம் என்று வரிசைப்படுத்தி சொல்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்ட வாரியாகச் சொல்ல வேண்டுமென்றால், 1951-52-ம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்திலும், பிறகு மற்ற மாவட்டங்களிலும் ஆரம்பித்தார்கள் அதிலே ஒவ்வொரு ஆண்டும் நஷ்டமாக வந்திருக்கிறது. 1972-73-ல் மட்டும் 3,90,100 ரூபாய் கோவை மாவட்ட சம்மேளனத்தில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. சென்னை மாவட்டத்தில் 1,88,244 ரூபாய் நஷ்டம். திருச்சியில் 5,79,846 ரூபாய் நஷ்டம். திருநெல்வேலியில் 17,32,002 ரூபாய், இது 1972-73-ஆம் ஆண்டில். அதேபோல் இராமநாதபுரம், மதுரை மாவட்டத்தில் 24,575 ரூபாய் அந்த சம்மேளனத்தில் இந்த ஆண்டு மட்டும் லாபம் வந்திருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் 96,277 ரூபாய் நஷ்டம். சேலம் மாவட்டத்தில் 10,75,000 ரூபாய் நஷ்டம். இப்படி எல்லா மாவட்டங்களிலுமுள்ள சம்மேளனங்களிலே நஷ்டக் கணக்கைத்தான் காண்பித்திருக்கிறார்கள்.

Cows secured by Dairy Development Corporation

* 210 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether bulls and cows have been secured by the Tamil Nadu Dairy Development Corporation from foreign countries during the calendar year 1973 ; and

(b) if so, the details thereof?